**இரத்மலானை/ மொறட்டுவ மற்றும் ஜா - எல /எக்கல கழிவு நீர் அகற்றல் செயற்திட்டம் - 2013**

---

இரத்மலானை/ மொறட்டுவ மற்றும் ஜா - எல /எக்கல கழிவு நீர் அகற்றல் செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சுவேடிஸ் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2006 மார்ச் 02 ஆம் திகதிய விசேட உடன்படிக்கையின் (பங்களிப்பு இல. 71001436) 11 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணியின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

---

செயற்திட்டத்தின் விசேட உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. சுற்றாடலிற்கோ அல்லது மக்களுக்கோ ஆபத்தல்லாத அத்தகைய வழியில் சுத்திகரித்த கழிவு நீர் மற்றும் சாக்கடை அகற்றலுடன் மத்திய நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியில் கைத்தொழில் மற்றும் வீட்டுக்கழிவு நீர்சுத்திகரிப்பு என்பவற்றின் முறையான சேகரிப்பு இரத்மலானை/ மொறட்டுவை, ஜா-எல/ எக்கல ஆகிய இரண்டு பகுதிகளில் மாசுபடுத்தாத முகாமைத்துவத்தை உறுதிப்படுத்துவதே செயற்திட்டத்தின் பிரதான குறிக்கோளாக உள்ளது. இரத்மலானை/ மொறட்டுவ மற்றும் ஜா-எல/ எக்கல இல் சாக்கடை வலையமைப்புகள் மற்றும் சுத்திகரித்தல் வசதிகளின் ஏற்பாடுகள் ஊடாக கொழும்பைச் சுற்றியுள்ள பகுதிகளில் உணர்வுபூர்வமான சுற்றாடல் முறைமை மற்றும் கைதொழிலின் நிலைபேறான அபிவிருத்தியை நிறுவுதல் என்பவற்றில் முன்னேற்றமடைந்த நிலைமை மற்றும் கொழும்பு பெரும்பாகப் பகுதிகளிலுள்ள மக்களிற்காக முன்னேற்றமடைந்த சுகாதார மற்றும் வாழ்க்கை நிலைகளை வழங்குதல் செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த நீண்ட கால குறிக்கோள்களாகும். குறிப்பிட்ட உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 16,300 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 142.76 மில்லியனானதுடன் அதில் ரூபா 10,495 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 91.92 மில்லியன் அல்லது 64.4 சதவீதம் சுவேடிஸ் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு முகவரால் கடனாக நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்ததுடன் ரூபா 683 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 5.98 மில்லியன் அல்லது 4.2 சதவீதம் மானியமாக நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்ததுடன் மிகுதி ரூபா 5,122 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 44.86 மில்லியன் அல்லது 31.4 சதவீதம். இலங்கை அரசாங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2008 பெப்ரவரி 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2013 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று பட்டியலிடப்பட்டிருந்தது. பின்னர் செயற்திட்ட காலப்பகுதியானது 2015 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து

பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியிணர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் மற்றும் மானியமளிக்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் மற்றும் மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றை தொடர்ச்சியான அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) விசேட உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும் இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) விசேட உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டிய ரூபா 4,175,369 தொகை கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. மேலும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆலோசனையாளருக்கு செலுத்த வேண்டிய ரூபா 85,389,881 ஆன தொகை கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1987 இன் 03 ஆம் இலக்க அரச ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம், ரூபா 5 மில்லியனை அல்லது அதைவிட அதிகமான பெறுமதியான ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களிற்கான ஒப்பந்தகாரர்கள் அரச ஒப்பந்த பதிவாளருடன் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும், உடன்படிக்கை கேள்விகள் வழங்கிய பின்னர் 60 நாட்களிற்குள் பதிவு செய்யப்படாவிடின் வாடிக்கையாளர் ஒப்பந்தகாரருடன் தொழில் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்க முடியாது. எவ்வாறாயினும், செயற்திட்டமானது மேற்குறிப்பிட்ட வேண்டுகைகளை பின்பற்ற தவறிய 03 ஒப்பந்தகாரருடன் ஒப்பந்தம் செய்திருந்தது.

(ஆ) செயற்திட்டத்தால் நிலையான சொத்துக்களின் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை., மேலும், நிதிப்பிரமாணம் 756 இல் வேண்டப்பட்டவாறு 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்களின் உள்ளதன்மையை உறுதிப்படுத்துவதற்கு மீளாய்வாண்டிற்காக பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட தீர்வுகாணப்படாத கணக்காய்வு விடயங்கள்**

முன்னைய ஆண்டில் வழங்கப்பட்ட என்னுடைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பின்வரும் கணக்காய்வு விடயங்கள் தீர்வு காணப்படாது இருந்தது.

(அ) 2012 ஆம் ஆண்டில் செயற்திட்டத்தால் ரூபா 20.28 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்படுகின்ற நீரிறைக்கும் நிலையத்திற்காக சுவீகரிக்கப்பட்ட காணி மற்றும் ரூபா 28.23 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 07 மோட்டார் வாகனங்கள் முறையற்ற விதத்தில் நடைபெறும் வேலையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) விசேட உடன்படிக்கையின் I ஆம் உறுப்புரையின் பிரகாரம் ஜா-எல/ எக்கல கழிவு நீர் பொறித்தொகுதி தொடர்பில் சுற்றாடலிற்கோ அல்லது மக்களுக்கோ ஆபத்தல்லாத அத்தகைய வழியில் சுத்திகரித்த கழிவு நீர் மற்றும் சாக்கடை அகற்றப்பட வேண்டும். எவ்வாறாயினும், கணக்காய்வு பரிசோதனை திகதியான 2015 ஆகஸ்ட் 30 வரையும் அத்தகைய முறைமை அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்காக பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2013 திசெம்பர் 31 வரையான பயன்பாடு என்பன தொடர்பான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | விசேட உடன்படிக்கையில் வழங்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| கடன் | 91.92 | 10,495 | 600 | 8.92 | 1,137.47 | 84.55 | 9,686.14 |
| மானியம் | 5.98 | 683 | 100 | 0.90 | 115.95 | 6.22 | 740.06 |
| இலங்கை அரசாங்கம் | 44.86 | 5,122 | 600 | 1.98 | 256.10 | 27.67 | 3,283.90 |
| | 142.76 | 16,300 | 1,300 | 11.80 | 1,509.52 | 118.44 | 13,710.10 |

### 3.2. பௌதீக செயலாற்றல்

செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், செயற்திட்டமானது ஜா –எல / எக்கல் கழிவு நீர் கட்டுப்பாட்டு சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணம் மற்றும் குழாய் பொருத்தல் நடவடிக்கைகள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பகுதியளவில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மொறட்டுவ / இரத்மலானை கழிவு நீர் கட்டுப்பட்டு சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணம் மற்றும் குழாய் பொருத்தல் நடவடிக்கைகள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 86.04 சதவீத முன்னேற்றத்தை காட்டியிருந்த போதிலும் ரைடர் குழாய் வழி பொருத்துதல், சாக்கடை வழி நிர்மாணித்தல் மற்றும் அமுக்கம் பரீட்சித்தல் போன்ற ஏனைய துணைநிலை நடவடிக்கைகள் 48.17 சதவீதமான மெதுவான முன்னேற்றத்தை காட்டியிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

செயற்திட்டத்தின் கீழ் கழிவு நீர் கட்டுப்பட்டு சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணம் மற்றும் குழாய் பொருத்துதல் நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தம் 2008 இல் வெளிநாட்டு இணைந்த கம்பனியொன்றிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் உரிய ஒப்பந்த உடன்படிக்கை இணைந்த கம்பனிகளின் பிரதான பங்காளர் முடங்கியமையால் 2013 நவம்பரில் இடைநிறுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தம் இடைநிறுத்திய நேரத்தில், உள்ளபடியான நட்டங்கள் மதிப்பிடப்பட்டு செயலாற்றல் பிணைமுறியிடமிருந்து செயற்திட்டத்தால் அறவிடப்பட்டிருக்கவில்லை. மிகுதி வேலைகளிற்கான ஒப்பந்தம் ரூபா 314.26 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2.38 மில்லியன் கிரயத்தில் பங்காளாராக இருக்கின்றவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

**3.4. சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

வழமையாக, செயற்திட்ட பதவியணியினரின் வேதனங்களின் கணிப்பீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் செய்யப்படுகின்றதுடன் 20 சதவீதம் மேந்தலை கட்டணங்களாக செயற்திட்டத்திலிருந்து அறவிடப்படுகின்றன. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு செயற்திட்டத்தால் செலுத்தப்பட்ட அவ்வறான மேந்தலைக் கட்டணங்களாக ரூபா 250.91 மில்லியனாகும்.

**3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

செயற்திட்டத்தால் உரிய நாட்களில் ஒப்பந்தகாரருடைய கோரிக்கைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தால் ரூபா 7.52 மில்லியன் தொகையான அவற்றின் மீதான தாமதக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தது.